## மணப்பாறை நகராட்சி

**2018 – ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ( 10.12. 2018) 10 –ஆம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 10.12.2018 | **பொருள் – 1**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு –IIல் திருச்சி – திண்டுக்கல் பைப்பாஸ் ரோடு சாலையில் அமைந்துள்ள வார்டு எண்.5–ல் உள்ள தர்மலிங்கம் தெருவில் சுமார் 200 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அங்கு குடியிருப்பவர்கள் பயன்படுத்தப்படும் கழிவு நீர் பைப்பாஸ் ரோட்டில் தேங்கி வருகிறது. கழிவு நீர் செல்ல வழிவகை இல்லை. பொதுமக்கள் இடம் இருந்து பெறப்பட்ட புகார் மீதும் மற்றும் சட்டமன்ற துணை சபாநாயகர், சட்ட மன்ற உறுப்பினர் ஆய்வின்போது தெரிவித்த அறிவுரைபடி, பொது மக்களின் அவசர அவசியம் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் தனியார் செப்டிங் டேங் லாரி பணி மேற்கொள்ள செலவின தொகை ரூ.50,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. செலவினத் தொகையை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>2. மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும். | **தீர்மான எண். 447 அனுமதிக்கப்பட்டது.** |
| 10.12.2018 | **பொருள் – 2**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் TURIP 2018–19 ஆம் ஆண்டு நிதியின் கீழ் ரூ.300.00 லட்சம் மதிப்பீட்டில் தார்சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ள மாநில ஒப்பந்தப்புள்ளி மலரில் பிரசுரம் செய்தமைக்கான கட்டணம் ரூ.44226/– (நாற்பத்து நான்காயிரத்து இருநூற்று இருபத்து ஆறு மட்டும்) Bright Avertising சென்னை அவர்களுக்கு வழங்குவதற்கும் இதனை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 448 அனுமதிக்கப்பட்டது.** |

10.12.2018

**பொருள் – 3**

மணப்பாறை நகராட்சியில் உள்ள புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பெண்கள் கட்டண கழிப்பறை வசூல் செய்யும் பணிக்கு ரசீது புத்தகங்கள் அச்சடிக்க உள்ளூர் அச்சகத்தில் விலைப்புள்ளி கோரப்பட்டத்தில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | அச்சகங்களின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | வெங்கடேசா ஆப்செட் பிரிண்டார்ஸ், சின்னக்கடை வீதி, மணப்பாறை | ரூ.100/– |
| 2. | கங்கா ஆப்செட் பிரிண்டார்ஸ், மதுரை ரோடு, மணப்பாறை | ரூ.70/– |
| 3. | ஜோதி பிரிண்டார்ஸ், இரயில்வே ஸ்டேசன் ரோடு, மணப்பாறை | ரூ.120/– |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. கங்கா ஆப்செட் பிரிண்டார்ஸ், மதுரை ரோடு, மணப்பாறை அவர்களுக்கு பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

அனுமதிக்கலாம்

( ந.க.எண்.5602/ 2015/ அ2 )

**தீர்மான எண். 449**
**அனுமதிக்கப்பட்டது.**

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**